**தலைப்பு 292 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 292 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 03 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும், பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,072.78 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 1,008.63 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 64.15 மில்லியன் அதாவது 5.98 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 501.78 | 498.15 | 3.63 | 0.72 |
| மூலதனம் | 571.00 | 510.48 | 60.52 | 10.60 |
| மொத்தம் | **1,072.78** | **1,008.63** | **64.15** | **5.98** |

### 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 29201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியான வை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 26.50 | 26.49 | 18.50 | 22.94 | 120.00 | 75.87 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் கீழான 04 வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 22.2 மில்லியன் கூட்டுமொத்தமாக இருந்தன. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0110/000 | 0.32 |
| 6000/0000/00/0013/0106/000 | 7.61 |
| 6000/0000/00/0002/0153/000 | 0.21 |
| 6000/0000/00/0016/0098/000 | 14.06 |
| மொத்தம் | **22.20** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில்

உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | கடமை தொலைபேசி பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

-----------------------------------------

**பாதீட்டு முரண்கள்**

----------------------------------

06 செலவின விடயங்களுக்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டிலிருந்து ரூபா 117 மில்லியன் தேறிய நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தினால் விண்ணப்பிக்கப்பட்டிருந்த கட்டுநிதி வழங்கப்படாமையால் ரூபா 15.93 மில்லியன் நிதிஏற்பாட்டினை பயன்படுத்த முடியாமல் போனது.

**3.3 பொது வைப்புக் கணக்குகள்**

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 02 வருடங்களை விஞ்சிய ரூபா 1,105,077 கூட்டுத்தொகையான 16 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,224,402 தொகை உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(இ) 02 வெளிநாட்டு நிறுவனங்களினால் கால்நடை மருத்துவ சங்கத்தின் மூலம் கிடைத்த முறையே ரூபா 2,894,933 மற்றும் ரூபா 200,000 தொகை உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

29201 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 818,425 ஆக இருந்ததுடன், அந் நிலுவை மீதிகள் அறவிடப்படாமல் 01 வருடம் முதல் 19 வருடங்கள் வரையான காலவீச்சில் இருந்து வந்த போதிலும், அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் வழங்கப்படும் சம்பள முற்பணங்களுக்குரிய ரூபா 3,106,806 ஆன வட்டி வருமானத்தின் பெறுமதி உறுப்பினர் கடன் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 6.1 பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு மாத இறுதியின் போதும் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி உறுப்பினர் கடன்பதிவேட்டின் மீதிகளுடன் ஒப்பிடப்படாதிருந்தமையால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் மீதியில் ரூபா 98,125 ஆன வேறுபாடு காணப்பட்டது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் விளைவற்றோ அல்லது குறைப்பயன்பாட்டிற்குட்பட்டோ இருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| சொத்து வகை | | அலகு எண்ணிக்கை | **விளைவற்றும் குறைப் பயன்பாட்டுடன் இருந்த காலப்பகுதி** |
|---|---|---|---|
| (i) | காணி(ஹெக்டேயார்) | 34.41 | |
| (ii) | கட்டிடங்கள் | 25 | 01 ஆண்டு முதல் 15 ஆண்டுகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | வரை |
| (iii) | மோட்டார் வாகனங்கள் | 14 | 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரை |
| (iv) | இயந்திர பொறிகள் | 54 | 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரை |
| (v) | ஏனைய சொத்துக்கள் | 310 | 01 ஆண்டு முதல் |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

---

2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் பொருள் மெய்மையாய்வின் போது கைதவிர்க்கப்பட வேண்டிய 3 ஆண்டுகள் முதல் 5 வருடங்கள் வரையான வீச்சிலான கால்பகுத்தியில் செயற்பாடற்றிருக்கும் 04 உபகரணங்கள 2017 சனவர 27 ஆந் திகதி வரையிலும் கைதவிர்க்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

---

திணைக்களத்தினால் 02 கட்டிடங்கள் 16 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மேல் மாடியில் ஒரு பகுதி 2004 ஆம் ஆண்டிலிருந்து வெளிநாட்டுச் செயற்திட்டமொன்றிற்காக வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது.

**(ஈ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

---

ஏனைய நிறுவனங்களிடமிருந்த 16 காணிக்கூறுகள் முறையாக கையேற்கப்படாமல் திணைக்களத்தினால் 02 ஆண்டு முதல் 06 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன.

## 3.6 இணக்கமின்மைகள்

---------------------------------

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

------------------------------------------------------------------------------------------------------------------

தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | ரூபா | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் | | |
| (i) XV ஆம் அத்தியாயத்தின் 4.3 ஆம் பிரிவு | 8,000,000 | 04 உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்றமை தொடர்பான பிணைமுறி கையொப்பமிட்டிருந்த பிணையாளர்களின் தகைமை பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) XV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவு | - | வெளிநாடு சென்ற கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தரொருவர் தொடர்பாக கட்டாய சேவைக் காலப்பகுதிக்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) XIX ஆம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பிரிவு | | 2016 யூலை 05 ஆந் திகதி இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தரொருவரிடமிருந்து அரச வீட்டின் உரித்தினை கையேற்பதற்கு திணைக்களத் தலைவர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 94(1) | 14,243,978 | 15 மூலதன செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பினை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. |

(இ) அரசின் பெறுகைகள் வழிகாட்டல் கோவை

| | | | |
|---|---|---|---|
| (i) | 5.4.8(அ) வழிகாட்டல் | 164,069 | மதிப்பிடப்பட்ட ஒப்பந்த தொகையில் 05 சதவீதமான ரூபா 813,469 ஆன செயலாற்றல் பிணைப் பெறுமதிக்காக ரூபா 649,400 ஆன செயலாற்றல் பிணை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 7.10 வழிகாட்டல் | 2,357,784 | ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு இயலுமை மற்றும் இயலளவு இருப்பதாக பெறுகை நிறுவனத்தினால் தீர்மானிப்பதற்காக பின் தகைமை பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படாமல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) | 8.14.1 வழிகாட்டல் | 269,966 | ஒப்பந்தமொன்றுக்காக உடன் படிக்கையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் தாமத கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 3.7 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்தல்

போதியளவு செயன்முன்னேற்றமொன்று பெற்றுக்கொள்ளப்படாத செயற்திட்டங்கள், செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்படல் மற்றும் செயற்திட்டங்களை மேற்கொள்வதில் காணப்பட்ட தாமதங்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) போதியளவு செயன்முன்னேற்றமொன்று பெற்றுக்கொள்ளப்படாதிருந்த செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட செயற்கை சினைப்படுத்தல் நடவடிக்கைகளிலிருந்து (Artificial Insemination) உருவான செயற்கை சினைப்படுத்தல் பிறப்புக்களின் அளவினை (Calving) கருத்தில் கொள்ளும் போது 18 சதவீதம் முதல் 38 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டண.

(ii) பாலினம் தீர்மானிக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட விந்தணுக்கள் (Sexed semen)

14,582 பாலினம் தீர்மானிக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட விந்தணுக்கள் (Sexed semen) அளவில் 2013 ஆம் ஆண்டின் போது குண்டகசாலை செயற்கை சினைப்படுத்தல் நிலையத்திற்கு அமைச்சின் மூலம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் செயற்கை சினைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக 13,911 வழங்கப்பட்டிருந்தன. அதில் மேற்கொள்ளப்பட்ட செயற்கை சினைப்படுத்தல் நடவடிக்கைகள் (A1) மாகாண மட்டத்திலும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அளவுடன் ஒப்பிடும் போது ஒரு மாகாணத்தில் மாத்திரம் 60 செயல்முன்னேற்றம் காணப்பட்டதுடன் ஏனைய மாகாணங்களிலும் தனியார் நிறுவனங்களினதும் செயற்கை சினைப்படுத்தல் நடவடிக்கைகள்

7 சதவீதம் முதல் 54 சதவீதம் வரையான வீச்சில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

(iii) பாலினம் தீர்மானிக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட செயற்கை சினைப்படுத்தல் நடவடிக்கைகள் (A1) மற்றும் அதன் பிறப்பு அளவு (Calving) தொடர்பாக கருத்தில் கொள்ளும் போது இரண்டு மாகாணங்கள் மற்றும் தனியார் நிறுவனமொன்றும் எவ்வித திருப்திகரமான பெறுபேற்றையும் அடைந்திருக்கவில்லை. அது மொத்த அளவில் 4 சதவீதம் அளவிலான மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்**

---------------------------------------------------------------------------------------

ரூபா 3.94 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்திலான கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தின் ரணிகட் ஊசி தரக் கட்டுப்பாட்டிற்காக கோழி வீடொன்று நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் 2016 ஆகஸ்ட் 07 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதற்காக ரூபா 1.12 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. உடன்படிக்கை பிரகாரம் நிர்மாண வேலைகள் நிறைவேற்றப்படாத காரணத்தினால் மீண்டும் 2017 மார்ச் 27 ஆந் திகதி ரூபா 3.21 மில்லியன் செலவின மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு பரிந்துரைக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

-----------------------------------------------------------------------------------

ரூபா 3.60 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்திலான தெலஹர ஆடுகள் இனவிருத்தி நிலையத்தில் ஆட்டுப்பட்டிகளை அமைக்கும் நடவடிக்கைகள் ஒப்பந்தத்தின் பிரகாரம் 2016 நவம்பர் 28 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. பிரதேசத்தில் காணப்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக அச்செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறைவேற்ற முடியாமல் இருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அச்செயற்திட்டத்திற்காக ரூபா 1.19 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அச்செயற்திட்டம் 2017 பெப்ரவரி 10 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

### 3.8 நட்டங்களும் சேதங்களும்

1998 பெப்ரவரி 28 ஆந் திகதி மற்றும் 2000 மார்ச் 16 ஆந் திகதி விபத்திற்குட்பட்ட வாகனமொன்றின் மொத்த நட்டம் ரூபா 123,950 ஆக இருந்தது. வாகனத்திற்கு ஏற்பட்ட நட்டத்திற்கு உரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 462,999 தொகைக்கு வாகனம் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

### 3.9 தீர்வுசெய்யப்படாத கணக்காய்வு பந்திகள்

திணைக்களத்திற்குரிய முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைகள் தொடர்பாக திணைக்களத்தினால் சீர் செய்யப்படாத பந்திகளுடனான தொடர்பு கீழே காட்டப்பட்டுள்ளன.

| **கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளுடனான தொடர்பு** | | **தொடர்புடைய விடயம்** |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2015 | 3.8(அ) | திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டிடமொன்றில் மேல் மாடி தனியார் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2006 திசெம்பர் முதல் 2016 மே வரையாக காலப்பகுதிக்குரிய ரூபா 690,000 ஆன நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| 2015 | 3.8(ஆ) | நீர்ப்பட்டியல் கொடுப்பனவின் போது கண்டி மாநகர சபைக்கு செலுத்தப்படாதிருந்த ரூபா 304,566 ஆன மிகை கட்டணமொன்றை உரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3.10 முகாமைத்துவ நலிவுகள்

---------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1986 நவம்பர் 08 ஆந் திகதி முதல் 2012 யூன் 21 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் வெளிநாடு சென்ற உத்தியோகத்தர்களால் உடன்படிக்கை மீறப்பட்ட காரணத்தினால் அரசிற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 9,008,323 ஆன தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்திற்குரிய கட்டம்பே, பேராதனை கால்நடை வளங்கள் அறிவூட்டல் கேந்திரம் அமைந்துள்ள கட்டிடத்தின் மேல் மாடியின் பகுதியொன்று 2004 யூன் 01 ஆந் திகதி முதல் தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையின் பிராந்திய அலுவலகமொன்றை நடாத்திச் செல்வதற்காக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2006 திசெம்பர் மாதம் முதல் 2017 யூன் மாதம் வரை அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 846,000 தொகையான நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.11 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 193 | 146 | 49 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 21 | 20 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 338 | 293 | 45 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 395 | 303 | 92 | - |
| | மொத்தம் | 947 | 762 | 188 | 03 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

ஆட்சேர்க்கப்பட்டிருந்த 03 மிகை ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### (ஆ) ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்

2008 மே 22 ஆந் திகதி முதல் 2012 யூன் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த கால்நடை உத்தியோகத்தரொருவர் 2012 யூலை 01 முதல் மீண்டும் திணைக்களத்திற்கு சேவை அறிக்கையிட வேண்டியிருந்தது. 2016 திசெம்பர் 14 ஆந் திகதி சேவைக்கு சமூகமளித்த உத்தியோகத்தர் தற்போது கிராமிய பொருளாதாரம் தொடர்பான அமைச்சில் சேவையில் ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2016 சனவரி மாதம் முதல் 2017 மே மாதம் வரை ரூபா 1,665,006 தேறிய சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அச்சம்பளத்தை மீள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.